# இந்துக்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையேயான உறவு நிலை- பாண்டிருப்பு திரௌபதி அம்மன் வழிபாட்டினை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

**க.மதிசீலன்**

ஒப்பீட்டுச் சமயமும் சமூக நல்லுறவும் கற்கைகள் துறை,
கலை,கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

## ஆய்வுச்சுருக்கம்

மட்டக்களப்பு இந்துக்களுக்கும் (முக்குகர்களுக்கும்) இஸ்லாமியர்களுக்கும் இடையே மிக நெருங்கிய தொடர்பு இருந்தமையாலேயே முஸ்லீம்கள் திரௌபதி வழிபாட்டில் கூடிய ஈடுபாடு கொண்டிருந்தனர் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதனை வெளிப்படுத்திக்காட்டும் ஒன்றாக பாண்டிருப்புத் திரௌபதி அம்மன் ஆலய பரிவாரத்தெய்வங்களில் ஒன்றாக பட்டாணியார் கோயில் அமைந்துள்ளது. இத் திரௌபதி அம்மன் ஆலயத்தின் வடக்குப்புறமாக அமைந்துள்ள பட்டாணி கோயில் ஆரம்பகாலத்தில் இருந்தே இஸ்லாமியர்களால் வழிபடப்பட்டு வருகின்றது.

இவ்வாறு முன்னைய காலங்களில் பாண்டிருப்புத் திரௌபதி அம்மன் ஆலயத்துக்கும் இஸ்லாமியருக்கும் இடையே இருந்த நெருங்கிய உறவு அண்மைக்காலங்களில் அருகிக்கொண்டு வருவதாகக் கூறப்படுகின்றது. இக்கூற்று உண்மையானதா எனக்கண்டறிதலும் அவற்றுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றைப் பகுப்பாய்வு செய்வதுமே இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது. மேற்கூறப்பட்டதன்படி இந்துக்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் இடையே தற்காலங்களில் உறவில் விரிசல் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாய்வானது அவர்களிடையேயான நெருங்கிய உறவினைக் கட்டியெழுப்ப முனைப்புக் கொண்டிருக்கும் அறிஞர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள், பொது நலச் சேவையாளர்களின் கவனத்தை ஈர்க்கவும் சமூக அபிவிருத்தியின்பால் அவர்களைத் தொழிற்பட வைக்கவும் தூண்டுதலாக அமையும் எனலாம்.

கலைச் சொற்கள்: திரௌபதி, பரிவாரத்தெய்வங்கள், பட்டாணியார், இந்துக்கள், இஸ்லாமியர்கள்